Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (25-11-66) இதழ் 285
பராபவ ஷ்பான் 11 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை


KimberCHIKS.
அமெரிக்காவிலிருந்து வந்த நோயற்ற ஒரு நாள் பொரித்த வளரும் கோழிக்குஞ்சுகள்
ஏகவிநியோகஸ்தர்கள்:
றூவ் டொப் பண்ணை
2338, கோட்டா ரோட்,
கொழும்பு-8
த. பெ. இல. 602. போன்: 92118

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.
இன்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு.

1-ம் பரிசு
16 Z 0374 - ரூ. 95,370

2-ம் பரிசு
22 U 0496 - ரூ. 38,148

3-ம் பரிசு
37 C 0044 - ரூ. 9,537

(8-ம் பக்கம் பார்க்க)

# மந்திரி திருச்செல்வம் பதவி துறக்கமாட்டார்

## தமிழரசு எம். பி. க்கள் மௌனம் சாதிக்கின்றனர்

கொழும்பு, வியாழன்
மந்திரி திருச்செல்வத்தைப் பிரதம மந்திரி கடிந்து கொண்டதாக வெளிவந்த செய்திகள் குறித்து தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் குறிப்பாக பாரிலிமெண்ட் அங்கத்தவர்கள் எதுவித தகவலும் வெளியிடக்காணோம்.

பத்திரிகை நிருபர்கள் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களை அண்மிக் கேட்டபோதெல்லாம் அவர்கள் ஒன்றும் வெளியிட மறுத்துவிட்டார்கள். ஆனால் அரசாங்கத்தைச் சேர்ந்த மற்ற அங்கத்தவர்கள் மத்தியில் இந்த விஷயமே முக்கிய சம்பாஷனையாக இருந்து வருகின்றது. பிரதமர் கடிந்து கொண்டது பற்றி அவர்கள் தாராளமாகப் பேசிக்கொண்டிருப்பர்கள்.

பாராளுமன்றக்குழுக்கூட்ட நிகழ்ச்சிகளை வெளியிட வேண்டாம் என்று பிரதமர் விடுத்த எச்சரிக்கையை தமிழரசுக்கட்சி எம். பி. க்கள் மட்டுமே உறுதியாகக் கடைப்பிடிப்பதாகத் தெரிகின்றது.

மந்திரி திருச்செல்வத்தை பத்திரிகை நிருபர்கள் அணுகி விசாரித்தபோது அவர் திரு. செல்வநாயகத்திடம் கேட்கும்படி கூறிவிட்டார். பாராளுமன்றக் குழுக்கூட்ட விபரம் பற்றி தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் மௌனமாகவே இருந்து வருகின்றார்கள்.

## கைவிடவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி
தேசிய அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சி சேர்ந்தபொழுது, அது தனது சமஷ்டிக்கொள்கையையோ இலட்சியத்தையோ கைவிடவில்லையென்றும் சமஷ்டிக் கொள்கை பற்றி திரு. திருச்செல்வம் பேசுவது எவ்விதத்திலும் தவருகக் கருதுவதற்குஇடமில்லையென்றும் தமிழரசுக்கட்சிவட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## ராஜினமா கூடாதென்று கட்சித்தலைவர்கள் கருத்து


### பிரதமர் டட்லியை நாளை சந்திப்பார்கள்

கொழும்பு, வியாழன்
உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் இப்போதைக்கு தமது அமைச்சர் பதவியை ராஜினமா செய்ய மாட்டார் என்று "ஈழநாடு" நம்பகமாக அறிகிறது.

மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் இன்று தமது பதவியை ராஜினமா செய்யலாமென்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கிடையே இன்று இரவு கொழும்பில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம்தற்போதைக்கு ராஜினமா செய்யக் கூடாது என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்ததாகவும் இதைத்தொடர்ந்தே அமைச்சர் திருச்செல்வம் ராஜினமா செய்ய மாட்டார் என்றும் நம்பப்படுகிறது.

இதற்கிடையே வடக்கு கிழக்குமாகாணங்களிலுள்ள தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்களிடமிருந்தும் கட்சிக்கிளைகளிடமிருந்தும் தமிழரசுக்கட்சித்தலைவருக்கும், உள்ளூராட்சி மந்திரிசெனட்டர் எம். திருச்செல்வத்துக்கும் ஏராளமான தந்திகள் கிடைத்துள்ளன. "அமைச்சர் திருச்செல்வம் ராஜினமா செய்யக்கூடாது" என்று அவர்கள் கோரியுள்ளனர்.



(4-ம் பக்கம் பார்க்க)

(முன்வந்த செய்தி)

## எஸ். ஜே. வி.க்கு மந்திரி திருச்செல்வம் கடிதம்

கொழும்பு, வியாழன்
தேசிய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து திரு. மு திருச்செல்வம் ராஜினமாச் செய்யப்போவதாகவும் அவர் தமது ராஜினமாக் கடிதத்தை எச்சமயத்திலும் சமர்ப்பிக்கக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

தமிழரசுக்கட்சிப்பிரமுகரான திரு. திருச்செல்வம்மந்திரி பதவியைத் தாம் ராஜினமாச்செய்ய விரும்புவதாக தமிழரசுக்கட்சியின் பாரிலிமெண்டரிக்குழுத் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## சமஷ்டிக் கொள்கையை பிரதமர் எதிர்க்கிருர்

கொழும்பு, வியாழன்
சமஷ்டிக் கொள்கைக்கும் தமக்கும் சம்பந்தமே இல்லையென்றும், சிலர் சமஷ்டிக் கொள்கையை எந்த அளவுக்கு ஆதரித்துப் பேசுகிருர்களோ அந்த அளவுக்கு தாம் அதை எதிர்ப்பதாகவும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, நேற்று 'அலரிமாளிகை'யில் நடைபெற்ற அரசாங்கக் கட்சிக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தாராம்.

சமஷ்டிக் கொள்கை என்றமுறையில் போன்ற சர்ச்சைக்குரிய விஷயங்களில் தேசிய அரசாங்க அங்கத்தவர்கள் என்ற முறையில் எவரும் தங்கள் சொந்தக்கருத்தைக்கூட பகிரங்கமாகத் தெரிவிப்பது கூடாதென்றும் பிரதமர் கூறியதுடன் திரு. திருச்செல்வம், சமஷ்டிக்கொள்கைபற்றி பொது மேடைகளில்பேசிவருவதையும்குறை கூறினாராம்.

மந்திரி சபை அங்கத்தவர் பொறுப்புக் கொள்கையை திரு. திருச்செல்வம் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டுமென்றும் பிரதமர் கூறினாராம்.

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற அரசாங்க பாரிலிமெண்டரிக்குழுக்கூட்டத்தில் திரு. திருச்செல்வம் நடந்துமுடிந்த உபதேர்தல் சமயத்தில் தமது கட்சியின் 'சமஷ்டிக்கொள்கை' பற்றி பகிரங்கமாகப்பேசியது குறித்து பிரதமர் கடிந்துகொண்டதாகவும் இதவே திரு. திருச்செல்வம் தமது பதவியை ராஜினமாச் செய்ய முன்வந்துள்ளதற்

(8-பக்கம் பார்க்க)

## 'இறுதிவரை சமஷ்டியை எதிர்த்து நிற்போம்'

கொழும்பு, வியாழன்
'இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி அமைப்பதை இறுதி வரை எதிர்ப்போம்' என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் எட்டியாந்தோட்டை எம். பி.யுமான டாக்டர் என். எம். பெரேரா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் பேசுகையில் கூறினூர்.

'நான் கனடாவுக்குப் போகச் சந்தர்ப்பம் கிடைத்தது மிகவும் நல்லதாகப் போயிற்று கனடாவில் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைபடு தோல்வியடைந்துவிட்டது நூறு வருடங்களாகியும் இன்னும் அங்கு மொழிப் பிரச்னை தீரவில்லை. இன்றும் அங்கு மொழிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சிங்களத்துக்காக சிறையும் செல்வோம்'

### பார்லிமெண்டில் பீலிக்ஸ்

கொழும்பு, வியாழன்
'இந்த நாட்டின் சட்டத்தின்படி இந்த நாடு ஆளப்படவேண்டும். செல்வநாயகத்தின் விருப்பப்படி நாடு ஆளப்படக்கூடாது. எங்களுக்கு மாவட்டசபைகளும் வேண்டாம் தமிழரசும் வேண்டாம். இந்த நாட்டைப் பிரிக்க நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம், இறுதி மூச்சு உள்ள வரை-தேவனின் ராஜ்யம் வரும்வரை எதிர்த்துப் போராடுவோம்' என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிப்பிரமுகரும் தொம்பே எம். பி.யுமான திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயகா இன்று பிரதிநிதிகள் சபையில் பேசுகையில் கூறினூர்.

அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிக்க பாரிலிமெண்டின் இரு சபைகளையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!

உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமானவிலைகள். இலாபம் என்றால் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ ஞானஜெனிசிஸ், அளவெட்டி. 1492

## தேவை

மனேஜர்:

யாழ்ப்பாணத்தில் உள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு நேர்மை, நம்பிக்கை, வியாபார அனுபவமுள்ள நடுத்தர வயதினராகவும் உள்ள மனேஜர் தேவை. பிணைப் பணம்; ரொக்கம் 1500/-. மாதம் ஒன்றுக்கு ரூபா 100/- தகுதிக்கேற்ற உயர்வு உண்டு. 30-ந் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2008, ஈழநாடு, மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 2008

வேலையாள்:

ஒரு சிறு குடும்பத்துக்குச் சமையல்வேலைசெய்ய வயது முதிர்ந்த ஒருபெண் தேவை. நல்ல சம்பளம், உடுதுணி, உணவு உட்பட வழங்கப்படும். அ. குமரகுரு, புறக்டர், காங்கேசன்துறை. 2006

ஆசிரியை!

தாவரவியல், விலங்கியல். தமிழிலும் ஆங்கிலத்திலும் படிப்பிக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியை தேவை. விபரங்களுக்கு: வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 2010

## நன்றி நவிலல்

கயிலைநாதன் - எல். கே. மாணிக்கம் தம்பதிகள் டாக்டர் திருமதி ஜெகநாதன் (Dental Surgeon), டாக்டர் திருமதி திரு. அருள் மற்றும் காலஞ் சென்ற கயிலைநாதன் (Accountant, A. Baur & Co. Ltd.) அவர்களின் குடும்பத்தினரும், அன்னாரின் சமச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பிய, மலர் வளையங்கள் அனுப்பிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். இலங்கையிலும், சுவிற்சலாந்திலும் அவர் அண்மையில் நோயுற்றிருக்கும்போது உதவிசெய்த நண்பர்களுக்கும், அனுதாபிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றனர். தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு தங்கள் வருத்தத்தைத்தெரிவித்துக்கொள்கின்றனர். மூளாய், மானிப்பாய். 2009

## கல்வி

கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பயிற்சி பெறுவதற்காக கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், தமிழ் ஆகியவை 45 வருட வர்த்தக ஆசிரிய அனுபவமுடையவரால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. வர்த்தகக்கல் லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை / வதிரி, கரவெட்டி. 2011

## நன்றி அறிவித்தல்

எமது தந்தையார் தி. சதாசிவம்ஐயர் அவர்களின் சமக்கிரியையின் பொருட்டு நேரில் சமூகமளித்தவர்கட்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கட்கும் எமது அனுதாபத்துடன் நன்றியைத் தெரியத்தருகிறோம். ச. சண்முகநாதன், ச. தில்லைநாதன், ச. கணநாதன், பிள்ளையார் கோவில், மண்கும்பான், வேலணை. 2003




## கொழும்பு

வெள்ளி 25 - 11 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இன்னிசை கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 தேசிய இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — என். வைத்திலிங்கம், 9-30 தேர்ந்த இசை, 10-00 நேயர்விருப்பம்.

## போக்குவரத்து பாதிப்பு

பூநகரி, விரா அண்மையில் வீசிய புயலினால் கடலில் மூழ்கிய கேரதீவு - சங்குப்பிட்டி பாதை இன்னும் மீட்கப்படவில்லை. தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட 'இராசேவினிப்பு' என்ற இயந்திரப் படகும் பூரணமாகச் சேவை நிகழ்த்தப்படவில்லை. இதனால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுப் பொதுமக்கள் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் மாந்தை வழியாக பூநகரிக்குத் தமது வாகனங்களை எடுத்துச் செல்கின்றனராம்.


## வடிசாராயம் வைத்திருந்தார்


மாவிட்டபுரம், விரா. சங்கானையைச்சேர்ந்த கந்தசாமி என்பவர் சட்டவிரோதமாக அறுபத்தி நாலு போத்தல் கோடா, இரண்டரை ரூல் வடிசாராயம், வடிசாராயம் வடிக்கும் உபகரணங்கள் ஆகியவற்றைவைத்திருந்ததாகச் சங்கானைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்தியானந்தா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு எடுக்கப்பட்டதும் எதிரி தான் குற்றவாளியென்றார். இதனை ஏற்ற நீதிபதி எதிரியை 300 ரூபாய் அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டார். எதிரி அபராதம் செலுத்தத் தவறினால் ... மாதம் சிறைத் தண்டனை விதித்தார்.





விதை பாதுகாப்பு செரசான்:
நெற்பயிரை பாதிப்பதற்கு அனுசரணையாக விருக்கும் நெல் தீய்ந்து போதல், பழுப்புழுதல், வேர் அழுகுதல் போன்ற பூஞ்சண வியாதிகள் விதைகளையும், விதை முளைகளையும், பாதிக்காமல் இருப்பதற்கான நிவாரணி. நடுவதற்கு முன்பு விதைகளுக்குப் பூசலாம்.





சேர்கோப்பூர் (3.4-டி.பீ.ஏ)
நெற்பயிருக்குபோடப்படும். உரத்தை கிரகித்து நெற்பயிருடன் போட்டியிட்டு விளைச்சலை பாதிக்கும் புல்களையும் களைகளையும். அழித்து விடுகிறது. சேர்கோப்பூர் ஒரு களை நாசினி. நெற்கதிர்களுடன் வளரும் எல்லாவித களைகளையும் கட்டுப்படுத்த சிறந்தது சேர்கோப்பூர். தெளிக்கும் கருவி மூலம் (Sprayer) சேர்கோப்பூர் தெளிக்கும் பொழுது அது வெளியாகுவதில் தடைப்படாது.

ஹெடோனல் எம். (எம்.சி.பி.ஏ) &
ஹெடோனல் "டி" [2.4 டி]
இது ஒரு சிறந்த களை கொல்லி. முக்கியமாக நெற்கிருஷியில் அகலமான இலைகளையுள்ள களைகளை வெகு வல்லமையுடன் அழிக்க வல்லது. ஹெடோனல் களைகளை அழித்து அதே நேரத்தில் உங்கள் விளைச்சல்களை பாதுகாக்கிறது.





பொலித்தியோன்
நெற்கிருஷியை பாதிக்கும் பூச்சி புழுக்களை முக்கியமாக மொய்க்கும் கம்பளிப்பூச்சிகள், முளைத்தண்டை துளைத்து உறிஞ்சும் பூச்சிகள் இலைகளை சுழற்றும் பூச்சிகள் போன்றவைகளை அழிக்கும் சக்திவாய்ந்தது

டிப்டரெக்ஸ் எஸ். பி. 80
நெற்கிருஷியை பாதிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த டிப்டரெக்ஸ் எஸ். பி. 80 மிகச் சிறந்தது. மறைந்திருந்து சேதம் விளைவிக்கும் மூட்டுப் பூச்சிகளையும் இலை சுழற்றிகளையும் இலைகளை வெட்டும் பூச்சிகளையும் தண்டை துளைக்கும் பூச்சிகளையும் இலகுவில் ஒழித்துக் கட்டும் கிருமி நாசினி.





லெபேசிட் ஈ. சி. 50
நற்பயிர்களின் தண்டுகளை துளைபிடிக்கும் சாறுறுஞ்சும் பூச்சிகளினால் ஏற்படும் பெரும் அபாயங்களை ஒழித்துக்கட்ட கமக்காரர்கள் காத்திருக்கவேண்டியதில்லை. லெபேசிட் ஈ.சி. நெடுங்கால சக்திவாய்ந்தபணிப்பூச்சி நாசினி வெட்டி ஆபத்தை அழிக்கும்.

டிப்டரெக்ஸ் தூள்
நெற்கிருஷியை பாதிப்பதற்கு மிகப் பெரிய காரணமாய் இருப்பது நெல் ஈ டிப்டரெக்ஸ் தூளை தூவிவிடுவதால் இதனை சம்பூரணமாக கட்டுப்படுத்தலாம். இது நெற்கிருஷியை பாதிக்கும் முட்டைப் பூச்சிகளை ஒழித்து விடுகிறது.





எமது விவசாய இரசாயன பகுதி நவீன முறைகளில் விவசாய இரசாயனப் பொருள் உபயோக முறைகளை செயல் முறைகளில் விரும்பும் கமக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் போதனைகளுடன் செய்து காட்டி உதவி புரிய எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
றோயல் டிஸ்பென்சரி,
270, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

விவசாய இரசாயனப் பொருளாளர்;
ஹேலீஸ் லிமிட்டட்
(விவசாய இரசாயன பகுதி,
தபால் பெட்டி 70, 400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10,

BAYER

தொலைபேசி: 96333

Vision-HL-10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆசிய அபிவிருத்தி வங்கி' ஜப்பானில் அங்குரார்ப்பணம்

டோக்கியோ, நவ. 24

ஆசிய அபிவிருத்தி வங்கி பேச்சுவார்த்தை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது 32 ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஆரம்ப வைபவத்தையொட்டிப் பேசிய ஜப்பான் பிரதமர் திரு. சாட்டோ இந்த வங்கி ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுமென்றும் சகலரின் ஒத்துழைப்பும் இதற்குக் கிடைக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இந்த வங்கியில் ஆசிய நாடுகள் அல்லாத நாடுகளும் சேர்ந்துகொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்து விரைவில் இதில் சேர்ந்துகொள்ளவிருக்கிறது.

அபிவிருத்தி வங்கி என்ற முறையில் இந்த வங்கி ஆசிய நாடுகள், தூரகிழக்கு நாடுகள் ஆகியவற்றின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும். இந்த நாடுகளின் தனியார்துறை அபிவிருத்திக்கும் இந்த வங்கி உதவும்.

## பெரியதொரு நெசவாலை இலங்கையில் உருவாகும்

### ஜெர்மனி ஜனநாயக குடியரசு கடன் உதவி

கொழும்பு, வியா

இலங்கையில் பெரியதொரு நெசவாலையை அமைப்பதற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு 50 லட்சம் கடன் உதவி வழங்க முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தமொன்று நேற்று கைச்சாத்தாகியது.

இந்தநெசவு ஆலை அம்பலுகஸ்ஸ என்னுமிடத்தில் நிறுவப்படவிருக்கிறது. 1970-ம் ஆண்டில் நெசவாலை வேலைகள் பூர்த்தியாக்கப்படுமெனவும் பூர்த்தியாக்கப்பட்டதும் 9 கோடியார் துணி நெசவு செய்யக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநெசவாலையில் நூலும் உற்பத்திசெய்யப்படவிருக்கிறது. இந்த நெசவாலை 3500 பேருக்கு வேலை வாய்ப்பளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநெசவாலை பூர்த்தியாக்கப்பட்டால் ஆசியாவிலேயே மிகப்பெரிய நெசவாலையாக இது இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

## ரூ. 2 கோடி செலவில் ஓட்டுப் பலகை தொழிற்சாலை

கொழும்பு, வியாழன்

ஓட்டுப்பலகை கூட்டுஸ்தாபனம் சப்ரகமுவா மாகாணத்தில் 1 கோடி 80 லட்சம் ரூபா செலவில் ஓட்டுப்பலகை உருவாக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவிருக்கிறது.

இத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் ஓட்டுப்பலகைத் தயாரிப்பு 40 சதவீதம் அதிகரிக்குமென நம்பப்படுகிறது. 1 கோடி 60 லட்சம் வரையான வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது தேயிலைப் பெட்டிகளுக்கான இந்த ஓட்டுப்பலகை ரஷ்யா, ருமேனியா, சுவீடன், யப்பான், ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதியாகின்றன.

உத்தேச தொழிற்சாலை அமைக்கப்பட்டதும் இதில் சுமார் 1000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஜிந்தோட்டையில் ஒரு ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

ஆந்திராவில்

### மாணவர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

புதுடில்லி, நவ 24

ஆந்திராவில் எஃகு ஆலை ஒன்று நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து அக்டோபர் 27-ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்துவந்த மாணவர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென நேற்று முடிவு செய்தார்கள். நேற்று விசாகப்பட்டினத்தில் கூடியபோதே அவர்கள் இவ்விதமுடிவு செய்தார்கள்.

## இந்தியா அமெரிக்க காலனியா?

ஹொங்கொங், நவ. 24

இந்தியா மேலும் மேலும் அமெரிக்காவின் ஒரு அசல் காலனியாகக் கீழிறங்கிவிட்டதாக சீனா இங்கு கூறியுள்ளது.

தற்போதைய உணவு பற்றாக்குறை நிலைமைபற்றி நவசீன செய்தி ஸ்தாபனம் குறிப்பிடுகையில், அதன் உண்மைக்காரணம் வரட்சியல்லவென்றும், ''பெரியமுதலாளிகள், நிலச்சுவாந்தார்களின் நலனுக்காக இந்திய அரசாங்கத்தினால் பின்பற்றப்படும் பிற்போக்கான கொள்கையே'' உண்மைக் காரணமெனவும் கருத்து வெளியிட்டுள்ளது.

(பி.டி.ஐ.)

## தளங்களை சோதிக்க வேண்டும்

ஐ. நா. (நியூயோர்க்), நவ 24

ஒரு விரிவான அணு ஆயுத பரீட்சைத்தடை ஒப்பந்தம் சந்தேகிக்கப்பட்ட பரீட்சைத் தளங்களைச் சோதனையிடுவதற்கும் வசதி செய்யவேண்டுமென அமெரிக்கா நேற்று இங்கு வலியுறுத்தியது.

(பி.டி.ஐ.)

## மலாயாவில் வெள்ளம்

கோலாலம்பூர், நவ. 24

வடகிழக்குப் பருவகால மழை, மலாயாவில் பரவலாக வெள்ளத்தை ஏற்படுத்தியுள்ளது. பல கிராமங்கள் 4 அடி நீர்மட்டத்துள் மூழ்கியிருந்தன.

(பி.டி.ஐ.)

## தானாக இயங்கும் மூக்குக் கண்ணாடி

ஜெனீவா, நவ. 24

தானாக இயங்கும் மூக்குக் கண்ணாடிச் சட்டங்களின் தயாரிப்பில், சுவிட்சர்லாந்து கண் நிபுணர் ஒருவர் புதிய முறையொன்றினைக் கண்டுபிடித்துள்ளார்.

இதன்படி, மூக்குக்கண்ணாடியின் கைப்பிடிகள், அழுக்கக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. கண்ணாடிச் சட்டத்தைத் தொட்டதும் கைப்பிடிகள் தாமாகத் திறந்துகொள்கின்றன. அவை கண்களிலிருந்து எடுக்கப்பட்டதும் தாமாகவே மூடிக்கொள்கின்றன.

அவசர அலுவல்களில் ஈடுபட்டிருப்போருக்கு நேரத்தையும், சிரமத்தையும் இம்முறை தவிர்க்கிறது.

(பி.டி.ஐ)

## தொழிலாளர்-செங்காவலர் மோதல்

லண்டன், நவ. 24

சீனாவில் தொழிற்சாலை ஒன்றினுள் செல்ல முயன்ற செங்காவலர் படையினர் தாக்கப்பட்டதாகவும், தொழிலாளருக்கும் செங்காவலருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 60 பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15 மணி நேரம் வரை சண்டை நீடித்ததாம்.

## காரிலிருந்த பொருள்களை களவாடினராம்

சுன்னாகம், வியா.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றிற்கு வந்திருந்த டாக்டர் ஒருவர் தமது மோட்டார்வண்டியை றோட்டோரத்தில் நிறுத்தி விட்டு உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் அவருடைய காரிலிருந்த சில பொருட்கள் களவாடப்பட்டுவிட்டன. இதையிட்டு சுன்னாகம் பொலிசாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை தொடர்ந்து பொலிசார் நிற்சாமத்தைச்சேர்ந்த வி. சின்னத்தம்பியை பொருட்களுடன் கைது செய்து மல்லாகம் கோர்ட்டில் ஆஜர் செய்தனர். நீதிபதி திரு. டி. நிற்சிங்கா இவரை 100 ரூபா பிணையில் விட்டு இம்மாதம் 28ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

## [illegible]முக்கறிஞர் மகாநாடு

குரும்பசிட்டி, வியாழன்

அகில இலங்கை வழக்கறிஞர் சங்க வருடாந்த மகாநாடு இம்முறை கிளாலியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 27ந் திகதி நிகழ ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இம்மகாநாட்டினை ஆரம்பித்துவைக்க நீதி அமைச்சர் செனட்டர் திரு. ஏப். விஜயவர்த்தனே அழைக்கப்பட்டுள்ளார். மேற்படி மகாநாட்டில் தமிழ்ப்பகுதிகளிலிருந்து பலரும் பங்கு பற்றுவர்.

ஐ. நா. வில்

## அணுஆயுததடைபற்றி பாரதப் பிரதிநிதி

ஐ. நா. (நியூயோர்க்), நவ. 24

அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தைச் சகல நாடுகளும் மதித்து நடக்கவேண்டுமென்றும் விரிவான அணுஆயுதத் தடை ஏற்படவேண்டுமெனவும் ஐ. நா. விலுள்ள இந்தியப்பிரதிநிதி திரு. வி. சி. திரிவேதி தெரிவித்துள்ளார்.

மாஸ்கோ அணு ஆயுதத் தடைஒப்பந்தத்தில் மேலும் பல நாடுகள் கைச்சாத்திட முன்வர வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொரியா பற்றிய

### ஐ.நா. கமிஷன் கலைக்கப்பட வேண்டும்

பேர்லின், நவ. 24

கொரியா பற்றி ஐ.நா அங்கத்துவ நாடுகள் சில எடுத்துவரும் நடவடிக்கைகளை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிவிவகார அமைச்சின் உயர்தர அதிகாரி ஒருவர் வரவேற்றுள்ளார்.

அன்னிய படைகள் தென்கொரியாவிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் கொரியாபற்றிய ஐ. நா. கமிஷன் கலைக்கப்பட வேண்டுமென்றும் வடகொரியா விடுத்துள்ள கோரிக்கையை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆதரிப்பதாகவும் இவர் தெரிவித்தார்.

### பிரிட்டிஷ் கம்யூ.கட்சி கருத்து

பேர்லின், நவ. 24

வியட்நாமிலிருந்து அமெரிக்கா தனது துருப்புக்களை வாபஸ்பெற வேண்டுமென்று பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுகோஷ்டியொன்று இங்கு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

நேட்டோ, இராணுவக் கூட்டுக்கும், வார்சா இராணுவக்கூட்டுக்கும் பதிலாக ஐரோப்பிய அரசுகளின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிக்கும் ஐரோப்பிய பாதுகாப்பு முறையொன்றினை உருவாக்கவேண்டுமென்றும், ஜெர்மன் ஜனநாயகக்குடியரசை அங்கீகரிக்க வேண்டுமென்றும் இத் [?] தூதுகோஷ்டியினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

### அமைச்சருக்கு வர்த்தக ஊழியர் பாராட்டு

கொழும்பு, வியா.

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் வர்த்தக சம்மேளனத்துக்குமிடையில் இருந்துவந்த முட்டுக்கட்டையை நீக்க தொழில் மந்திரி ஜனாப் எம். எச். முகம்மது எடுத்துக்கொண்ட முயற்சிக்கு வர்த்தக ஊழியர் சங்கத்தினர் தமது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

தொழில் மந்திரி தெரிவித்த புதிய சமரசத்திட்டமொன்றின் அடிப்படையிலேயே இருதரப்பாரும் இணக்கமான முடிவுக்கு வந்துள்ளனர் என்பதும் இதனைத்தொடர்ந்தே இன்று வர்த்தக ஊழியர்கள் தாம் நடத்திவந்த வேலைநிறுத்தத்தை நேற்றுக் கைவிட்டனரென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

### தலைவர் மீது நம்பிக்கையில்லை

திருநெல்வேலி, வியாழன்

''துறைமுகத் தொழிலாளர் சங்கத்தலைவர் மீது தற்போது இயங்கும் நிர்வாகசபையின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. எனவே உடனடியாகக் கூட்டமொன்றைக் கூட்டி புதிய நிர்வாகிகளைத் தெரிய ஆவன செய்யுங்கள்'' என்று கூறும் ஒரு மகஜரை காங்கேசன்துறை - மயிலிட்டி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தினர் வடபகுதிக் கூட்டுறவு உதவி ஆணையாளரிடமும் திரு. எஸ். பொன்னுத்துரையிடம் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி சங்கத்தைச் சேர்ந்த எண்பத்தி மூன்று அங்கத்தவர்கள் இந்த மகஜர் சம்பந்தமான கூட்டத்தை வடபகுதிக் கூட்டுறவு ஆணையாளர் இவ்வார இறுதியில் கூட்டவிருக்கிறார் எனத் தெரிகின்றது.

### கோயில் விளக்கை திருடினராம்

மாவிட்டபுரம், வியா

அராலியில் உள்ள கோயிலொன்றில், தூண்டாமணி விளக்கொன்றைக் களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் மல்லாகம் நீதிபதி எதிரியைப் பார்த்து, ''கோயில் சொத்துகளை வீட்டு உடைமைகளைப் போல் பாவிக்கக்கூடாது; அவை புனிதமானவை'' என்று குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் அராலி மேற்கைச் சேர்ந்த சின்னப்பொடி என்றழைக்கப்படும் முருகன் வைரமுத்து என்பவர் அவ்வூரிலுள்ள கோயிலொன்றில் தூண்டாமணி விளக்கைத் திருடியதாகச் சுன்னாகப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. வழக்கு, நீதிபதி திரு. நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு, தனக்குக் கோயிலில் உரிமையுண்டு என்று கூறினார்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி எதிரியைப் பற்றி நன்னடத்தைப் பகுதி அதிகாரியிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கூறி வழக்கை அடுத்த மாதம் 7ந் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

### தொழிற்சங்க கருத்தரங்கு

குரும்பசிட்டி, வியாழன்

தபால் தந்திச் சேவையாளர் தொழிற்சங்கக் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 29ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவிருக்கின்றது. இக்கருத்தரங்கு நிகழ்ச்சியில் உலக தபால் தந்தி தொழிலாளர் இயக்கப் பிரதிநிதி திரு. [illegible] கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார் எனத் தெரிகிறது. இம்மாதிரியான கருத்தரங்கு கொழும்பு, காலி, கண்டி போன்ற நகரங்களிலும் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

மற்றவரை விடத்தாம் உயர்ந்தவரென்று யாரும் நினைத்துக் காரியங்கள் செய்வதாயின், அவர் கடவுளுக்கும் மனிதருக்கும் பாவம் செய்தவராகின்றார். கடவுளின் உலகிலே தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்று யாரும் கிடையாது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box [illegible] JAFFNA.
Telegrams: EELANADU Jaffna: Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை மீ 10 உ (25-11-66)


## வேலைநிறுத்த முடிவு

அறுபத்திஏழு ஸ்தாபனங்களில் கடமையாற்றும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த பத்தாயிரம் ஊழியர்கள் இருபத்திமூன்று தினங்கள் வேலைநிறுத்தம் செய்தபின் நேற்றுவேலைக்குத் திரும்பியிருக்கின்றனர். இந்த வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு 'உண்மையாகவே' பெரும் முயற்சி செய்த தொழில் அமைச்சரும் சமரசத் திட்டத்தை தயங்காது ஏற்றுக்கொண்ட வர்த்தக ஊழியரும், தயங்கி, சிறிதுகாலம் தாமதித்த பின்னராவது ஏற்றுக்கொண்ட முதலாளிமார் சம்மேளனமும் பாராட்டுக்குரியவர்களே.

சமரசத்திட்ட விபரம் இதுவரை முழுமையாக வெளிவரவில்லை. இருபத்திமூன்று தினங்கள் வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. இது சிறிய விஷயமல்ல. வேலைநிறுத்தம்செய்த ஊழியருக்கும், சம்பந்தப்பட்ட முதலாளிமாருக்கும் இதனால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும் நஷ்டங்களையும்விட நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டநஷ்டம் குறைந்ததாக இருக்கமுடியாது.

வேலைநிறுத்தம் தொழிலாளரின் கடைசி ஆயுதமாக இருக்கவேண்டும். இனி வேறு வழியில்லை என்ற நிலையில்தான் அதை உபயோகிக்க வேண்டும். இதேபோல் முதலாளிமாரும், 'இரண்டு நாளில் திரும்பிவிடுவார்கள், விட்டுப்பிடிப்போம்' என்ற மனப்பான்மையை இக்காலத்திலும் பின்பற்றுவது முறையல்ல. ஊழியருக்கும் குறைகளிருக்கும் என்பதை உணர்ந்து அவற்றை நீக்கத் தம்மாலியன்றவரை முயற்சி செய்யவேண்டும். தங்கள் தகராறுகளையும் அதனால் ஏற்படக்கூடிய பலப்பரீட்சை, பிடிவாத குணங்களையும் முதலாளியும் ஒரு தொழிலாளியும் புறம் ஒதுக்கிவிட்டு நாட்டின் பொருளாதார நிலையைப்பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம். நமது நாட்டின் பொருளாதாரநிலை மிக மோசமாகிக்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் வேலைநிறுத்தம் செய்வதும் வேலைநிறுத்தம் செய்யக்கூடிய நிலைக்குக் காரணமாக இருப்பதும், மன்னிக்கமுடியாத குற்றங்கள் என்றே கூறலாம். வேலைநிறுத்தம் செய்வதற்கு தொழிலாளருக்கு உரிமை இருப்பது உண்மையே. ஆயினும் அவர்களது உரிமையைவிட நாட்டுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமை பெரிது. முதலாளிமாருக்கும் இக்கடமையும் பொறுப்பும் உண்டு. அமைச்சர் தஹநாயகா கூறியதுபோல் வேலை நிறுத்தங்களைத் தடைசெய்ய வேண்டுமென்பதில்லாவிட்டாலும் வேலைநிறுத்தங்கள் நடைபெறுவதற்கு இடம் வைக்காமலும் அவை நீடிக்காமலும் உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகளை, அவசியமானால் முதலாளியும் தொழிலாளியும் கட்டுப்படக்கூடிய கட்டாய மத்தியஸ்த முறைகளை அமுல்நடத்தியாவது-நிலைமையைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு தொழில் அமைச்சரையும் அரசாங்கத்தையும் சார்ந்துள்ளது.

## நல்ல படிப்பினை

அம்பாறையில் சிறந்த முறையில் இயங்கிவந்த ஹார்டி தொழில்நுட்பப் பயிற்சிக்கல்லூரி இனிமேலும் மிக சிறப்பாக நடைபெறுமென்பதுடன் மாணவர்கள் கல்லூரிகளில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக விளங்குமென்பது அக்கல்லூரி அதிபரின் துணிச்சலான நடவடிக்கையிலிருந்து தெளிவாகியுள்ளது.

எங்கிருந்தோ, எப்படியோ இங்கு பல்கலைக்கழகங்களில் நுழைந்துவிட்ட 'ராகிங்' என்ற தொல்லை அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியில் சில மாணவர்களின் உருவத்தில் புகுந்து, ஒரு மாணவனைப் படுகாயப்படுத்தியதுடன் அக்கல்லூரியின் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றையும் சீர்குலைத்தது. இதன்விளைவாக அக்கல்லூரியில் பயிற்சிபெற்றுவந்த 248 மாணவர்களையும் அதன் அதிபர் வெளியேற்றிவிட்டார். 'ராகிங்' தொல்லையை ஒழிப்பதற்கு இதைத் தவிர துணிச்சலான நடவடிக்கை வேறு எதுவும் இருக்கமுடியாது. அக்கல்லூரியின் அதிபர் பாராட்டுக்குரியவர்.

என்றாலும் தவறு செய்வது மனித இயல்பு' தவறை உணர்ந்திருந்த வேண்டும். தவறு செய்பவர்களை மன்னிப்பது பெருந்தன்மை. தவறு செய்தமாணவர்கள் தாங்களாகவே முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்றம் செய்யாத மாணவர்களை தண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டும். அவர்களை மன்னித்து மீண்டும் கல்லூரியில் சேர்க்க அதிபர் முன்வரத் தயங்க மாட்டாரென நம்பலாம்.

## சுவை கெடுக்கும் நாகரீகம்

### நாட்டிலும் நகரிலும்

தன் வீட்டு விருந்துக்கு வரும்படி கொக்கை அழைத்த நரி, பரந்த தட்டு ஒன்றில் கஞ்சியைக் காய்ச்சி வைத்து அதைக் குடிக்கும்படி கொக்கைக் கேட்ட கதை, அன்றொருநாள் நண்பர் வீட்டுக்குப் போனபோது எனக்கு ஞாபகம் வந்தது.

நன்றாக விளக்கி மினுக்கிய உலோக தம்ளரில் நண்பர் தேத்தண்ணீர் கொண்டு வந்து வைத்தார். தேயிலையின் நறுமணம் கமகமவென்று அதில் வீசியது. அதை உடனே எடுத்து நாவில் விட்டு சுவைத்துக் குடிக்க ஆசையாயிருந்தது. ஆனால் அதில் கை வைக்க முடியவில்லை. அவ்வளவு சூடு. சூடு ஆறியபின் குடித்தால் ருசி கெட்டுவிடுமே என்று நினைத்து, விரல் வெந்து போனாலும் பரவாயில்லையென்றெண்ணி தூக்கி அண்ணாந்து வாயில் ஒரு சொட்டு விட்டவுடன் நாக்கு வெந்துபோயிற்று!

சூடு நன்றாக ஆறியபின்பு மறுபடியும் தூக்கி வாயில் விட்டேன். தம்ளரின் விளிம்பு வழியாக தேநீர் கசிந்து வழிந்து இரண்டு மூன்று சொட்டுகள் வெள்ளை வேட்டியில் விழுந்து அதைக் கறைப்படுத்தின.

குளிர்ந்தபானம் என்றால் மடமடவென்று வாயில் விட்டுவிடலாம். தேநீர், கோப்பி குடிக்கும் கெட்ட பழக்கத்தைப் பழகிக்கொண்டு பாத்திரங்களில் வாய் வைத்து அசுசிப்படுத்தாமல் அவற்றைக் குடிக்கும் வழி என்ன?

பாத்திரங்களை எச்சிற்படுத்திக் குடிக்கும் வழக்கம் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாதென்பது ஒரு பக்கமிருக்க தேநீரின் சூடு முழுவதையும் எடுத்துக் கொண்ட பாத்திரத்தின் விளிம்பை மிருதுவான உதடுகளில் எப்படி வைக்க முடியும்?

சில தேநீர்க் கடைகளில் மூக்குப் பேணிகள் வைத்திருக்கிறார்கள். தகரத்தால் செய்த இப்பேணிகளில் சூடு அதிகம் ஏறாதென்றாலும் அண்ணாந்து தூக்கி வாயில் ஊற்றும்போது நாக்கை அள்ளிக் கொண்டு போய்விடுகிறதே!

சுடச்சுட கலைத்துக் குடிக்க வேண்டுமானால் வாய்வைத்து உறிஞ்சித்தான் குடிக்க வேண்டும். இதற்கு வழி என்ன?

பொதுவாக காலையில் எழுந்தவுடன் குடலில் சுடுதண்ணீரை விடுவது உடம்புக்கு நல்லதல்ல. ஆனால் குளிர்காலங்களில் பலருக்கு வெந்நீர் குடிப்பது அவசியமாயிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் எனக்குத் தெரியத் தக்கதாகக் காலையில் கோப்பி குடிப்பதற்கு எல்லா வீடுகளிலும் தேங்காய்ச் சிரட்டைகளைச் சீவி வைத்திருந்தார்கள். சிரட்டையில் குடிப்பது ஏதோ இளிவான காரியம் என்ற ஒரு மட நம்பிக்கை நாகரீகத்துடன் வந்து சேர்ந்துவிட்டது. கோப்பை, பீங்கான் முதலியன வந்து சேர்ந்தன. வீட்டில் ஒரு 'டீ செட்' இருப்பது ஓர் அந்தஸ்து சின்னமாகியது. அருமந்த சிரட்டைகளை இப்பொழுது அடுப்பு எரிக்கவும் பயன்படுத்துவதில்லை.

முட்டுக்காய்த் தேங்காய்களிலிருந்து சிரட்டைகளை எடுத்து, அழகாகத் தும்புகளைச் சீவிச் செதுக்கி வைத்துக்கொண்டால் கொதிக்கும் நீரையும் அவற்றில் விட்டு பயப்படாமல் கைகளில் ஏந்தித் தாராளமாக வாய்வைத்து உறிஞ்சி அருந்தலாம். வீடுகளில் ஒவ்வொருவருக்கும் தனித்தனிச் சிரட்டைகளை வைத்துக்கொள்ளலாம். விருந்தினருக்கு கொடுப்பதற்கென்று அழகான வேறொரு 'செட்' வைத்துக்கொள்ளலாம்.

இதெல்லாம் கொஞ்சம் கட்டைவண்டிக் காலத்துப் பேச்சுப் போல சிலருக்குப் படலாம். ஆனால் எனக்கு என்னவோ சிரட்டையில் கோப்பி குடிக்கும்போது சொல்லமுடியாத ஓர் ஆனந்தமும் திருப்தியும் உண்டாகிறது. மற்ற பாத்திரங்களைப் போல சிரட்டைகளையும் பாவிக்க முன்னும் பின்னும் நன்றாகக் கழுவி ஒரு சுத்தமான இடத்தில் கவிழ்த்து வைத்துக்கொண்டால் கோப்பை, கிளாஸ் முதலியவற்றுக்கு செலவாகும் பணம் அவ்வளவும் மிச்சம்.

அரைச்சதம் செலவில்லாமல் இப்படி அருமையானதோர் இயற்கை பாத்திரம் இருக்கையில் இவ்வளவு காலமும் ஏன் வெளியூர் சரக்குகளுக்கு பணம் செலவழித்தேன் என்று எண்ணும்போது எனக்கு வெட்கமாயிருக்கிறது.

—வழிப்போக்கன்

## ஜனவரி தொடக்கம் செயற்படும்

உடுப்பிட்டி, வியா.

இம்மாதம் 11-ந் திகதி உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யூ. தகநாயக்காவினால் வதிரியில் திறந்துவைக்கப்பட்ட கரவெட்டி வடக்கு நெசவுநிலையம் உபகரணங்கள் வந்து சேராமையினால் இயங்காமலிருந்து வந்தது. தற்பொழுது தேவையான உபகரணங்கள்யாவும் வந்து சேர்ந்துள்ளதாக அறியப்படுகிறது. இந் நிலையம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடங்கி செயல்படும். இந்நிலையத்தில் 32 மாணவிகள் பயிற்சிபெறுவர்.

## கச்சாய் கிராம மக்கள் கோரிக்கை

கொடிகாமம், வியா.

இதுவரை காலமும் சரசாலைக் கிராமசபையின்கீழ் இயங்கிவந்த எட்டாம் வட்டாரமாகிய இராமாவில் வட்டாரத்தைக் கச்சாய்க் கிராமசபையுடன் சேர்க்கும்படி இவ்வட்டார மக்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கச்சாய்க் கிராமசபையின் கீழ் இருக்கும் கொடிகாமம் சந்தைக்குவரும் வருமானத்தில் அதிக வருமானம் இராமாவில் வட்டாரமக்களாலேயே வருகிறது. அதுவுமல்லாமல் இவ்வட்டாரம் கச்சாய்க் கிராமசபைக்கு அண்மையிலிருப்பதாலும், இவ்வட்டார மக்களின் முக்கிய க்ஷேத்திர ஸ்தானமாகக் கொடிகாமம் அமைந்திருப்பதாலும் இவ்வட்டாரத்தைக் கச்சாய்க் கிராமசபையுடன் சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நன்னீர்தேக்கம்

காரைநகர், வியாழன்

காரைநகர் திண்ணைக் களிக்குளத்தை நன்னீர் தேக்கமாகவும், வெங்காயச் செய்கைக்கு நீர் பெறக்கூடிய வகையிலும் ஏற்ற விதத்தில் அமைத்துத்தரும்படி, காரைநகர் வடக்கு கிராம முன்னேற்றச்சங்கமும், காரைநகர் மேற்கு பயிர்ச்செய்கைக் குழுவும் எடுத்த நடவடிக்கையினால் [illegible]

## மந்திரி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இரவு தமிழரசு கட்சித்தலைவர்களுக்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு மிடையே சந்திப்பு இடம்பெறுவதாகவிருந்த போதிலும் அவர்கள் இன்று சந்திக்கவில்லை. நாளை அல்லது நாளை மறுதினம் இவர்கள் சந்தித்து பேச்சுநடத்துவார்களென்று அறியப்படுகிறது.

இன்று இரவு நடைபெற்ற தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேசிய அரசாங்கத்தில் கட்சி சேர்ந்தபொழுது கட்சியின் அடிப்படைக்கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததென்றும் கட்சி தனது கொள்கைகளைக் கைவிடாமல்தான் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டதென்றும் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

சமஷ்டியைக் கைவிடுமாறு பிரதமர் இப்பொழுது கூறமுடியாதென்றும் அவருடன் இதுபற்றி விளக்கம் கேட்கப்படுமென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

தமிழ் பேசும் மக்களின் நலன்கருதி அமைச்சர் திருச்செல்வம் இப்போதைக்கு ராஜினாமாச் செய்யக்கூடாதென்று சகலரும் இக்கூட்டத்தில் கருத்துவெளியிட்டிருந்தனராம்.

## நல்ல சேவை

புதுக்குடியிருப்பு, வியாழன்

புதுக்குடியிருப்புப் பகுதியில் 1964-ம் ஆண்டு சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதுக்குடி கிராமசேவையாளர் திரு. சிவப்பிரகாசம் காரியாலயத்தில் தென்னம்பிள்ளைகளும், மாங்கன்றுகளும் வழங்கப்பட்டுவருகின்றன. இதனால் மக்கள் பெரிதும் ஆறுதலடைந்துள்ளனர்என அறியப்படுகிறது.

## இரு புதிய முத்திரைகள்

கொழும்பு, வியாழன்

சர்வதேச நீரியல் சகாப்தத்தை நினைவுபடுத்துமுகமாக அடுத்த மாதம் முதல் திகதியில் இரு புதிய முத்திரைகளை இலங்கை வெளியிடவிருக்கிறது. இலங்கையின் படத்தையும். இலங்கையின் பருவமழையைக் குறிக்கும் படத்தையும் கொண்ட 2 ரூபா முத்திரையும், 2 சத முத்திரையுமே வெளியிடப்பட இருக்கும் புதிய முத்திரைகள்.

## தராசு அறுந்தது: விற்பனவுமில்லை

சாவகச்சேரி, வியா

சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியில் உள்ள அரசினர் மரக்காலை ஒன்றில் தராசு அறுந்திருப்பதால் அங்கு மரம் விற்பனவு செய்வதில்லையாம்.

தராசு அறுந்து பல வாரங்களாகியும் அது திருத்தப்படாதிருப்பதால் அப்பகுதி மக்கள்பலர் பெரும் கஷ்டமுறுகின்றனர்.

## புயல் சேதம்

மன்னார், வியா

மன்னாரில் அண்மையில் ஏற்பட்ட புயலினால் ஐயாயிரத்துக்கு மதிகமான வாழைமரங்களும், தென்னை மரங்களும் சேதமடைந்துள்ளன. கரையோரங்களில் வசிக்கும் கடற்றொழிலாளர்கள் சரிந்த தென்னைமரங்களை வெட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். நாச்சிக்குடாவிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தரைமட்டமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்பிணக்கு சமரசமாக தீர்ப்பதற்கான நடவடிக்கை

## யாழ்ப்பாணத்தில் தொழில் அதிகாரிகளுடன் குழு ஆலோசனை

திருநெல்வேலி, வெள்ளி
யாழ்ப்பாணம் தொழிற் கந்தோர் அதிகாரிகளைச் சந்தித்து அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும் பொருட்டு இலங்கைத் தொழிற்பிணக்கு ஆணைக் குழுவினர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். இவர்கள் யாழ்ப்பாணம் தொழிற் கந்தோர் உயர்தர அதிகாரிகளில் ஒருவரான ஜி. டி ராஜாவை தொழிற்கந்தோரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இணக்கம், மத்தியஸ்தம், சமரஸம் ஆகியன மூலம் தொழிற்பிணக்குகளைத் தீர்க்கும் நடைமுறை, ஆகியன பற்றி விசாரணை செய்து அத்தகைய பிணக்குகளைத் தீர்ப்பதில் மேலான திறமையும் துரிதமும் ஏற்படச்செய்வதற்கு வேண்டியமுறைகள் பற்றிக் கலந்தாலோசிக்கவும், தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நடைமுறை, அனுட்டானம், நிர்வாகம் ஆகியனபற்றி விசாரணைமன்றங்களிடம் சமர்ப்பிக்கப்படும் தொழிற்பிணக்குகளைத் தீர்ப்பதில்மேலான திறமையும் துரிதமும் ஏற்படச்செய்யும் வண்ணம் அந்நீதிமன்றங்களின் சட்டம்நிர்வாகம் ஆகியவற்றில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி விசாரணை செய்யவுமே இக்குழு பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுத் தலைவர் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன இணைச்செயலாளர்களான திரு. பி நவரத்தினம், ஆர். எஸ். வனசுந்தரா, திருவாளர்கள் பி. பி. குணதிலகா, எஸ். ஜே. ஜெயதிலகா ஆகியோர் குழுவில் அங்கம் வகித்தார்கள்

இவர்கள் நேற்று மாலை அனுராதபுரிக்கும் சென்றுள்ளார்கள். இன்றும் நாளையும் திருகோணமலை, மட்டக்களப்பு தொழிற்கந்தோர்களுக்கும் சென்று பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடாத்தவுள்ளார்கள் ——

## சிரமதானம்

அச்சுவேலி வியா
வரணன் முருகமூர்த்தி கோவிலில் சிரமதான முறையில் கோவில் வீதி செப்பனிடப்பட்டது. நிலத்தைச் சீர்படுத்தி தென்னம்பிள்ளைகள் வைக்கப்பட்டன.

கோவில்குருக்கள் திருவைகணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் பலதொண்டர்கள் கலந்து கொண்டார்கள்.

## பார்படோஸ் சுதந்திரம் பெறும்

லண்டன், நவ 24
மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றுன் பார்படோஸ் இம்மாதம் 30-ம் திகதியன்று சுதந்திரம்பெறுகிறது. 17-ம் நூற்றுண்டு தொடக்கி பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இருந்துவந்த இந்நாடு சுதந்திரம் பெறுவதை அடுத்து சாம்ராஜ்யகூட்டணியில் சேர்ந்து கொள்ளும்.

## வீடு தீக்கிரை

சங்கானை, வியா
சங்கானை கிழக்கு நிற்சாமத்தைச்சேர்ந்த க. நடராசா என்பவரின் வீடு சென்றஞாயிறு தீக்கிரையாகிவிட்டது. இரவு ஏறத்தாழ 11-30 மணியளவில் வீட்டவர்கள் நித்திரையில் ஆழ்ந்திருந்தசமயம் எரிந்து கொண்டிருந்த குப்பிவிளக்கினுக் வரைவு கட்டப்பட்டிருந்த தட்டியில் தீப்பற்றி வீடு முழுவதும் தீக்கிரையானது. இதனை அணைக்க அவ்வூர் வாசிகள் எடுத்தமுயற்சி பலனளிக்கவில்லை இதையிட்டு கிராம சேவையாளருக்கும் வலிகாமம் மேற்குக்காரியாதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது

## தீண்டாமை ஒழிப்புக்கூட்டம்

உடுப்பிட்டி, வியா
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினரின் தீண்டாமை ஒழிப்புக்கூட்டம் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நாளை பி. ப. 4மணிக்குகன்று கம்சந்தை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி, திருவாளர்கள் நீர்வை பொன்னையன், கே. டானியல், இளங்கீரன் எம். கே. அந்தனிஇல் உட்பட வேறுபலரும் சொற்பொழிவாற்றுவர்.

## அபராதம்

மாவிட்டபுரம், வியா
உரும்பராயைச் சேர்ந்த திருச்செல்வம் வேதநாயகம் என்பவர் சட்ட விரோதமாக 969 ரூம் சோடா வைத்திருந்ததாக கன்னுகம் பொலிஸாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு டி. எஸ். திற்சிங்கா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதிஎதிரியை நூறுரூபாய் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## தொழிற் சட்டம் திருத்தக கோரிக்கை

கொல்லைநதை, வியாழன்
தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் அவர்களின் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்கும் வகையிலும் தொழில் சட்டங்களை திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் கண்டி இ. தொ. கா. மாநிலக் காரியாலயத்தில் நடந்த பிரதிநிதிகள், மாதர்கள், தோட்டக்கமிட்டித் தலைவர்கள் அடங்கிய கூட்டமொன்றில் இ. தொ. கா. தொழிலுறவு அதிகாரி திரு. அழகராஜ் பிரேரித்துப் பேசினர்.

பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றி தொழில் அமைச்சருக்கு பிரதி ஒன்றும் அனுப்பப்பட்டது.

புதுடில்லி, நவ. 24
எட்வர்ட் ஆபிரகாம் ஜார்ஜ் டானியல் என்பவர் 'லவ் இன் டோக்கியோ' என்ற இந்திப்படம் எடுத்த சினிமா அதிபர் மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறார். தாம் தமிழில் எழுதிய கதையை அனுமதிபெருது 'லவ் இன் டோக்கியோ' படம் எடுத்துள்ளார் என வழக்கில் கூறப்பட்டுள்ளது.

## நுளம்புத் தொல்லை

மன்னார், வியாழன்
மன்னார்ப் பகுதியில் குளம் குன்றுகளில் நீர் தேங்கியிருப்பதாலும் புல், பூண்டுகள் அதிகம் வளர்ந்துள்ளதாலும் நுளம்புகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துள்ளது இம்முறை மலேரியா தடுப்புப்பகுதியினரால் நுளம்புகளை ஒழிக்கும் மருந்து தெளிக்கப்படாமையினால் "மலேரியா" ஜுரம் பரவுமோ என மக்கள் அஞ்சுவதாகவும் தெரிகிறது.

## வீட்டில் சாராயம்

சங்கானை, வியா
சென்றஞாயிற்றுக்கிழமை (20-11-66) சங்கானை மதுவரி பாலன இலாகாவிற்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நிலையப்பொறுப்பதிகாரி திரு. வி. ரகுநாதன் தலைமையில் சென்ற கோஷ்டியினர் பெரியவிளானில் திக்கரை என்னுமிடத்தில் எஸ். அருளப்பு என்பவரது வீட்டைச் சோதனையிட்டு 9 போத்தல் வடிசாராயமும், சாராயம் வடிப்பதற்கு உபயோகிக்கும் உபகரணங்களையும் கைப்பற்றி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர் எனத்தெரியவருகிறது.


## பெற்றேர்- ஆசிரியர் சங்கவிழா

உடுப்பிட்டி, வியா
வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி பெற்றேர் ஆசிரியர் சங்கவிழா வரும் திங்கட்கிழமை அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கிறது. வல்வை பட்டினசபைத்தலைவர் திரு இரத்தினவடிவேல், உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொள்வர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசப் புகழ் பெற்றது




# சவரின்

## பார் சோப்

உங்கள் பணத்தை வீண்விரயமாக்காத ஒரு சோப்.

சவரின் பார் சோப் பல காரியார்த்த சலவைச் சோப்பாக மேன்மேலும் இலங்கை இல்லங்களில் விரும்பி உபயோககிகப்பட்டு வருகின்றது அதன் சுத்தமான, பாதுகாப்பான சேர்ககை முறை கரடுமுரடான சமையலறைப் பாத்திரங்களை கழுவுவதற்கும் விலை மதிக்கவொண்ணுததொன்ருக்கின்றது. சவரின் பார் சோப் பின் திண்மைத் தன்மையானது தேய்வைத் தடுப்பதுடன் நீண்ட கால உபயோகத்திற்கும் வழிகோலுகின்றது.

பி. சி. சி.
தர மிகு BCC தயாரிப்பு


## கெனடி ஞாபக தினம்

சுழிபுரம், விசா

கெனடி தனது வாழ்க்கை நிறைவேற்றிய சட்டங்கள் நீதியானதாகவும் நேர்மையானதாகவும் காணப்பட்டதால் தான் உலக மக்கள் அவரை போற்றுகின்றனர்.

கர்மவீரன் கெனடியின் நினைவுதினத்தைக் கொண்டாடும் நாம் அவருடைய பாதையைப் பின்பற்றி நாமும் நடக்க வேண்டும், அதன்மூலமே விழா எடுப்பதால் பலன் பெற்றவர்களாவோம் என்று தொல்புரம் கெனடி கழகத்தினர் வழக்கம்பரை அம்மன் கோவில்தீர்த்தமண்டபத்தில் கொண்டாடிய கெனடி விழாவில் ஓய்வு பெற்ற நீர்ப்பாசன பொறியிலாளர் திரு. அ. தையல்பாகர் ஜே. பி. பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு கழகச் செயலாளர் சண்முகத்தையா, அவர்கள் தலைமை வகித்தார். திரு. அ. தையல்பாகர். தொடர்ந்து பேசுகையில்; "எமது மூதாதையர்கள் சாதிப்பூசல்கள் மூலம் தமது காலத்தைக் கழித்துவிட்டார்கள். எமது இளைஞர்கள் சமத்துவமான முறையில் வாழ வேண்டும். நாம் ஒரு பகுதியினரை உரிமை கொடுக்காதவர்களாக்கிக்கொண்டு மற்றவர்களிடம் உரிமை கேட்பது நியாயமாற்றதே;" என்று கூறினார். திரு. மு சிவராசா. எஸ் கந்தையா. க. வாமதேவன் உட்பட பலர் பேசினர்.

## 8000 பேருக்கு 72 ருத்தல் மல்லி

நெடுந்தீவு, விசா

8000 மக்கள் வாழும் நெடுந்தீவுக்கு இம்முறை 72 ருத்தல் மல்லி மட்டும்தான் விநியோகிக்கப்பட்டுள்ளது. பல வியாபாரிகள் தாம் இதை எப்படி (கூப்பன்காரருக்கு) மக்களுக்கு விநியோகிப்பது எனப் பேசிக்கொள்ளுகிறார்கள். கர்ப்பவதிகள், குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார்கள், நோயாளர்கள் ஆகியோருக்கு மிகமிக அவசியமான மல்லிக்கு திடீரென பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

## பஸ் நிலையத்தில் கைதான இளைஞன்

திருநெல்வேலி, விசா

திருக்கோணமலையிலுள்ள வீடொன்றில் பணத்தையும் பொருள்களையும் திருடியவர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட கணேசன் என்ற இளைஞர் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு வி. ஜே. ராஜரட்ணம் முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட கணேசன் திருக்கோணமலைப் பொலிஸாரால் தேடுவதாக கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டதும், அவரை பிஸ்கால் பாதுகாப்புடன் திருக்கோணமலைக்கு அனுப்பிவைக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

## விலைப்பட்டியல் இல்லை


முருங்கன், விசா

வங்காலை, நானாட்டான், நறுவிலிக்குளம், சிலாபம், அரிப்பு போன்ற பகுதிகளிலுள்ள பல வர்த்தக கடைகளில் பெயரளவில்தான் விலைப்பட்டியல் தொங்கவிடப்பட்டிருக்கிறது. ஆனால் விலைப்பட்டியலிலுள்ள விலைப்படி பொருள்கள் விற்பதில்லை. ஏழைமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## நெசவுநிலைய திறப்புவிழா

குரும்பசிட்டி, விசா

வலி. வடக்குக் காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்த பின்தங்கியநிலையில் உள்ளதான ஊரங்குணை கிராமத்தில் அரசினர் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள கைத்தறி நெசவுநிலையம் இம்மாதம் 26-ந் திகதி திறந்துவைக்கப்படவிருக்கின்றது. இந்நிலையம் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா ஆகியோரால் சம்பிரதாயமுறைப்படி திறந்துவைக்கப்படும்.


இந்த நேர்மையான புதிய பி பி பி 66 திறமையைத் தேடும் மக்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. தானே மை நிரப்பும் அதன்விசேஷ கருவியை நீங்கள் விரும்புவீர்கள்!.......... அதன் சுலபமாக எழுதும் தன்மையால், மணித்தியாலக்கணக்கில் எழுதினுலும் மணித்தியாலங்கள் நிமிடங்களாய் மாறிவிடும்!..........பேனுவிலிருந்து மை ஒழுகாமலிருப்பது உங்களின் விருப்பத்திற்குரியதாகும்..........அதன் நெடுத்த பார்வைக்கழகான தோற்றம் உங்கள் கண்களைக் கவரும்!.... ......உங்கள் கையெழுத்து திருந்தும்!.......உண்மையாக பி பி பி 66 பேனுவின் சகல வாய்மைகளையும நீங்கள் விரும்புவீர்கள்!

# பி.பி.பி. 66

ஜப்பான் பிளட்டினம் கம்பெனியின் ஒரு தயாரிப்பு



பி பி பீ 66
பேனுவானது ஆண் பெண் மாவர்க்கும் உகந்தது.

சகலபொருட்கடைகளிலும் கிடைக்கும் பி. பி. பீ. 66 பேனுவை இன்றே கேட்டுப் பாருங்கள்.

ஏக விற்பனையாளர்;
ஜஹேந்திரம்ஸ் லிமிட்டெட், மகாராஜா பில்டிங். பாங்ஷால் வீதி, கொழும்பு-11,
டெலிபோன்: 3603


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டேபிள் டெனிஸ் சுற்றுப் போட்டி

## சென். ஜோன்ஸ் கல்லூரி சாம்பியனானது

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். மாவட்ட டேபிள் டெனிஸ் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற டேபிள் டெனிஸ் சுற்றுப்போட்டியின் சம்பியன் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் அபாரமாக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்து சாம்பியனானது. இச்சாம்பியன் போட்டியில் இரு கோஷ்டியிலும் மும்மூன்று வீரர்கள் கலந்துகொண்டார்கள். சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஞானந்தன், பைல்தாசன், ஹறேஸ் ஆகிய வீரர்களும் யாழ்ப்பாணக் கல்லூரியில் பொனே, பெஞ்சமின், இம்புறு ஆகிய வீரர்களும் கலந்துகொண்டனர். இவர்களுக்கிடையே நடைபெற்ற 9 ஆட்டங்களில் சென். ஜோன்ஸ் 6 ஆட்டங்களிலும் யாழ்ப்பாணக்கல்லூரி 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றன. சென் ஜோன்ஸ் கோஷ்டியில் அபாரமாக போட்டியிட்ட ஞானந்தன் தனது 3 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றார். மயில்ராசன் 2 ஆட்டத்திலும், ஹறேஸ் ஒரு ஆட்டத்திலும் முறையேவெற்றிபெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரியின் வீரர்களான பொனே இரு ஆட்டத்திலும், பெஞ்சமின் ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெற்றனர்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய கோஷ்டிகளின்புள்ளி விபரங்கள் வருமாறு:

சென்ஜோன்ஸ் 'ஏ' பிரிவு 7 புள்ளிகள்; வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 6 புள்ளிகள்; யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. 4 புள்ளிகள்; யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் கோஷ்டி 3 புள்ளிகள்; சென் ஜோன்ஸ் 'பி' பிரிவு 3 புள்ளிகள்; பற்றிசியன்ஸ் 2 புள்ளிகள்; சென். அலுஸ் 2 புள்ளிகள்; காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனக்கோஷ்டி ஒரு புள்ளியும் முறையே பெற்றன.

## நிவாரண உதவி

புதுடில்லி, நவ. 24

வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பீகார், உத்தரபிரதேஷ் ஆகிய இடங்களுக்கு நிவாரண உதவியாக 17 கோடி 60லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

## நீதிமன்றத்தில் சரண்

திருநெல்வேலி, வியா. பலாத்கார வழக்கொன்றில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. சி. ஜே. ராஜரத்தினத்தால் வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட எதிரி ஒருவர் புரக்டர் தனபசிங்கம் யோகநாதன் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த கதிரவன் செல்லன் என்பவர் அவரது மகளான சரஸ்வதி மேல் பலாத்காரம் பிரயோகிக்க எத்தனித்ததாக கோப்பாய் பொலிசாரால் இவ்வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

மேல்விசாரணையைமாஜிஸ்டிரேட் தைமாதம் 6-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பஸ்நிலையம் திருத்தப்படும்

அச்சுவேலி, வியா

அச்சுவேலி பஸ்நிலையத்தின் புனருத்தாரண வேலைகளைச்செய்ய அச்சுவேலிகிராமசபை முன்வந்துள்ளது.

நிலையத்தின் சீர்திருத்த வேலைகளைக்கவனிக்கஇப்பகுதிப் பொறியியல் கல்லூரும் இராமசபைத் தலைவர் எஸ். நி. சபாரத்தினமும் மேற்பார்வையிடுவர்.

## கொல்லங்கலட்டி இளைஞர்மன்றம்

பலாலி, வியாழன்

கொல்லங்கலட்டி இளைஞர் மன்ற வருடாந்த கூட்டத்தில் பின்வருவோர் புத்தாண்டு உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்: திரு. வ. சரவணமுத்து, தலைவர்: திரு. க. கனகராசா, உபதலைவர்கள்: திருவாளர்கள் த. செல்வரத்தினம், ஆ. ஞானசேகரம், ந. ஜீவேஸ்வரா. காரியதரிசி: திரு. ச. விமலராசா, உபகாரியதரிசி: திரு. பூ. காசிநாதன், தனாதிகாரி: திரு. த. தருமரத்தினம், உபதனாதிகாரி: திரு. வே. வல்லியசிங்கம்.


நிர்வாக உறுப்பினர்கள் ஏழு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மத்தியஸ்தர்கள் கூட்டம்

திருநெல்வேலி, வியாழன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச்சங்க மத்தியஸ்தர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்தமாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும்.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்


50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு:

1966 டிசம்பர் 1- திகதி மாவனெல்லையில் நடைபெறும்.



1-வது பரிசு ரூ. 100,000/- அல்லது மேர்ஷிடெஸ்பென்ஸ் 190, 4 ஸ்ரீ 8373 காரும் ரூபா 50,000/- ரொக்கமும்


2-வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய போர்ட் கோர்டினா காரும் ரூபா 15,695/- ரொக்கமும்



3-வது பரிசு ரூ. 10,000/- அல்லது புத்தம்புதிய போர்ட் ட்ராக்டர் (மெஸர்ஸ் சத்தியவாதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரூக் போட்டர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன்)

கம்பெனி பட்டியலில் விலை 14,000/-மாக விலை குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த ட்ராக்டரை விசேஷமாக குறைக்கப்பட்ட விலையான ரூ. 10,000/- க்கு வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் ரூபா 1,300/60 ரொக்கமாக பெற்றுள்ளனர்.



இந்தக் கார்களையும் ட்ராக்டரையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

## 50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையும் உணவும் இன்றி தவிக்கின்றார்கள்

## யாழ்ப்பாண ரோட்டரி சங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தலைவர் வெளியிட்டுள்ள ஓர் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளதாவது:

"எங்கள் சங்கத்தைச் சேர்ந்த சில மெம்பர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலே புயலால் பாதிக்கப்பட்ட பல கடற்கரை கிராமங்களுக்கு சமீபத்தில் சென்று பார்த்தபோது மக்கள் உணவும் உடையும் இல்லாமல், படும் சங்கடங்களைக் காண சகிக்கவில்லை. சில குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் உடையும், பணமும் விநியோகிக்கப்பட்டது.

தங்கள் புருஷனையும், புதல்வர்களையும் கடலிலே இழந்த குடும்பத்தாரின் நிலைமை இப்போது மிகவும் பரிதாபம் முதலில் சில மாதம் சொற்ப உதவிகள் அளிக்கப்பட்டதெனினும் இப்போது அக்குழந்தைகள், இளம் விதவைகள், இவர்கள் நிலை மிகவும் பரிதாபமாகவுள்ளது. உங்களிடம் உபயோகித்த குழந்தைச் சட்டைகள், உடுப்புகள், பழைய புடவைகள் இருப்பின் அவற்றை தயவு செய்து யாழ்ப்பாணம் மெயின் வீதி, டயராமஸ் எனும் விலாசத்தில் கொடுக்க வேண்டுகிறோம். ரோட்டரி சங்க மெம்பர்கள், கடற்கரைக் கிராமங்களுக்கு நேரில் சென்று அவற்றை அந்த ஏழைகளுக்கு விநியோகித்து அவர்கள் கண்ணீரைச் சற்றே துடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் அவசரமானதும் முக்கியமானதுமான தர்மமாகும்."

## எஸ் ஜே வி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குக்காரணமென்றும் தெரிய வருகிறது.

திரு. செல்வநாயகத்துக்கு திரு. திருச்செல்வம் எழுதியுள்ள கடிதத்தில் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கைபற்றி பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் பிரதமர் கூறியது பற்றிப் பிரதமரைச் சந்தித்து அவரிடம் தெளிவான விளக்கத்தைக் கோருமாறு திரு. திருச்செல்வம் கேட்டிருக்கிறாராம்.

அரசாங்க பார்லிமெண்டரிக்குழுக்கூட்டத்தில் நடந்த சம்பவங்கள் பற்றியும் திரு. திருச்செல்வம் மந்திரி பதவியை ராஜினாமாச்செய்ய முன்வந்துள்ளது பற்றியும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு விரைவில் அவசரமாகக் கூடி ஆலோசனை செய்யவிருக்கிறது.

## இறுதிவரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நாட்டில் தமிழரும் சிங்களரும் ஒன்றாக வாழவேண்டும். இங்கு பிரிவினைக்கே இடமில்லை' என்று டாக்டர் என்.எம். பெரேரா கூறினார்

'சமஷ்டி என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளாமல் தமிழரசுக் கட்சியினர் பேசுகின்றனர்' என்று டாக்டர் என். எம் கூறிய பொழுது வட்டுக்கோட்டை எம். பி திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு' எங்களுக்கு அது தெரியும்' என்றார்.

என். எம்:- தமிழரின் உரிமைகளுக்காக நாங்கள் போராடிகஷ்டப்பட்டோம்.

அமிர்தலிங்கம்:- நீங்கள் குட்டிக்கரணமடித்துவிட்டீர்கள்.

எம். எம்:- நீங்கள் காட்டிக்கொடுத்துவிட்டீர்கள்.

டாக்டர் பெரேரா தொட

## தேசிய சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூ. 475·85 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 11 J 0720 | 36 D 0585 |
| 08 Y 0053 | 13 Q 0474 |
| 12 E 0971 | 23 B 0246 |
| 38 S 0801 | 33 S 0512 |
| 21 F 0273 | 18 L 0004 |
| 12 D 0983 | 39 C 0387 |
| 22 S 0102 | 35 K 0558 |
| 29 V 0870 | 36 A 0557 |
| 11 T 0233 | 30 J 0833 |
| 38 Z 0760 | 28 E 0686 |
| 10 O 0698 | 09 G 0152 |
| 32 H 0093 | 30 F 0239 |
| 36 L 0974 | 36 C 0933 |
| 13 A 0952 | 09 F 0412 |
| 09 T 0477 | 07 T 0434 |
| 28 F 0077 | 18 U 0857 |
| 34 G 0178 | 17 S 0609 |
| 14 Q 0886 | 20 A 0509 |
| 33 E 0418 | 20 T 0531 |
| 06 L 0852 | 35 F 0248 |
| 26 O 0028 | 14 Z 0469 |
| 26 D 0803 | 35 X 0162 |
| 08 L 0288 | 34 W 0028 |
| 26 K 0411 | 05 T 0062 |
| 38 F 0789 | 19 P 0749 |
| 07 C 0572 | 04 K 0326 |
| 36 E 0591 | 13 K 0341 |
| 02 S 0204 | 11 O 0578 |
| 24 R 0322 | 33 O 0217 |
| 28 B 0233 | 06 N 0282 |
| 32 N 0258 | 28 E 0027 |
| 13 Y 0018 | 36 L 0825 |
| 24 S 0201 | 21 V 0862 |
| 26 S 0682 | 19 K 0365 |
| 18 D 0447 | 21 G 0506 |
| 18 R 0489 | 11 P 0311 |
| 10 C 0329 | 04 O 0108 |
| 29 V 0882 | 12 F 0605 |
| 38 J 0954 | 37 D 0832 |
| 30 V 0547 | 10 K 0132 |
| 31 T 0881 | 15 Q 0747 |
| 11 A 0327 | 18 V 0653 |
| 12 D 0211 | 26 X 0658 |
| 16 X 0155 | 29 G 0273 |
| 06 G 0984 | 27 H 0325 |
| 16 F 0575 | 05 V 0209 |
| 14 K 0025 | 23 F 0675 |
| 14 H 0475 | 22 C 0605 |
| 27 E 0284 | 07 K 0627 |
| 05 B 0513 | 22 W 0923 |

இவை உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

சிந்து பேசுகையில் நாட்டை பிரிக்க ஒருபோதும் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்றும் கூறினார்.

# கல்வி மந்திரிக்கு 'சலூட்' பண்ணுகிறார்களாம்

## சிங்கள ஆசிரியர்களை அனுப்பியதற்கு பாராட்டு

கொழும்பு, வியாழன் வடமாகாணத்திற்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பியதற்காக கல்விமந்திரியை எதிர்க்கட்சி அங்கத்தவரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இன்று பாராட்டு தெரிவித்தார்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான பிரேரணையின் மீது திரு. பீலிக்ஸ் டயஸ் பிரதிநிதிகள்சபையில் பேசுகையிலேயே கல்விமந்திரியைப் பாராட்டினார்.

'திரு. இரியகொல்லை முதல் தடவையாக வடமாகாணத்திற்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதில் வெற்றிபெற்றிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் அவருக்கு 'சலூட்' பண்ணுகிறோம்' என்று திரு. பீலிக்ஸ் கூறினார்.

# வேலைக்கார சிறுமியை தாக்கினார்களாம்

## பெண்கள் இருவர் கைது

கொழும்பு, வியாழன் வேலைக்கார சிறுமியைத் துன்புறுத்தியதாக இரண்டு பெண்கள் கல்முனை பொலிசாரால் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

புஸ்ஸல்லாவ அட்டபாகை தோட்டத்தைச் சேர்ந்த 10-வயது சிறுமியான குணதாஸமேரி என்றசிறுமி உரும்பிராயில் உள்ள ஒரு வீட்டில் வேலைக்கு இருந்ததாகவும் அச்சிறுமி துன்புறுத்தப்பட்டதின் காரணமாக வீட்டிலிருந்து வெளியேறி அயல் வீடு ஒன்றில் தஞ்சம் அடைந்ததாகவும் அவர்கள் பொலிசுக்கு தகவல் கொடுத்ததின் பேரில் திருமதி தேவகிராசசூரியர், திருமதி எம்.ஏ' குலரட்ணம் ஆகிய இருவரையும் பொலிசார் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

குணதாஸமேரி தன்னை மேற்கண்ட இருபெண்களும் தாக்கியதாக புகார் செய்துள்ளார். சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின் இ சிறுமி பொலிசாரின் பாதுகாப்பில் இருந்துவருகிறார்.

## சிங்களத்துக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனக்கோரி ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொண்டுவந்த பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் திரு. பீலிக்ஸ் பேசினார்.

'மாவட்டசபைகள் பற்றி திரு. செல்வநாயகத்துடன் எதற்காக ஆலோசனை கலக்கவேண்டும்? திரு. செல்வநாயகத்தின் விருப்பத்துக்கு இணங்க இந்த அரசாங்கம் நடக்கிறது' என்று கூறிய திரு. பீலிக்ஸ் யாழ்ப்பாணத்திலும் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிப்பதை திரு. செல்வநாயகமும் அவரது சகாக்களும் தடைசெய்கின்றனரென்றும் இந்நிலையில் இங்கு எப்படி தேசிய ஒருமைப்பாடும் சமூகசௌஜன்யமும்ஏற்படுமென்றும் கேட்டார். தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிக்க அனுமதிக்கப்பட்டால் இதர பிரச்னைகளெல்லாம் தீர்ந்துவிடும் என்றும் அரசாங்க ஊழியர் சிங்களத் தேர்ச்சி பெறுவது சிறிய விஷயமென்றும் அவர் சொன்னார்.

'சிங்கள மொழிக்காகவே நாங்கள் வாழ்கிறோம் இதை மாற்றுவதற்கு யாராவது முயற்சிசெய்தால் அதை எதிர்த்துச் சிறை செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். சிங்கள மொழியைத் தியாகம்செய்ய நாங்கள் தயாராகவில்லை' என்றுதிரு. பீலிக்ஸ் கூறினார்.

பெரும்பான்மையினரின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கூறிய திரு. பீலிக்ஸ் அரசாங்கத்திலும் மந்திரி சபையிலும் ஒற்றுமையில்லை என்றும் யு. என். பி. க்கும் சமஷ்டிக் கட்சிக்கும் இரகசிய ஒப்பந்தமிருப்பதாகவும் கூறினார்.

திரு. பீலிக்ஸ் பேசுகையில் ஒரு கட்டத்தில் சுகாதார அமைச்சர் மொண்டேக் ஜயவிக்கிரமா குறுக்கிட்டு 'நானும் சமஷ்டியை எதிர்க்கின்றேன்' என்றார். இதற்கு திரு. பீலிக்ஸ் மகிழ்ச்சிதெரிவித்துவிட்டு அப்படியானால் சமஷ்டி கோரும் திரு. திருச்செல்வம் மந்திரிசபையில் எதற்காக இருக்கிறார் என்று கேட்டார்.

## ஜே. ஆர்.

கொழும்பு வியாழன் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன புதிய அரசாங்கம் பதவிக்குவந்த பின் முதல்தடவையாக வெளிநாடு செல்ல விருக்கிறார்.

இலங்கைக்கு உதவிகள் அளிக்கும் நாடுகளுக்கு அவர் விஜயம் செய்வார். அடுத்த ஆண்டு முற்பகுதியில் அவர் வெளிநாடு செல்லக்கூடும்.

## மரண அறிவித்தல்


### திருமதி கனகம்மா

சாவகச்சேரி முருகானந்தகபே, கிருஷ்ணபவான் இரண்டினது உரிமையாளருமான ஐ. நா. கணபதிப்பிள்ளையின் பாரியார் திருமதி கனகம்மா காலமானார். இவர் சி. முத்தையா தம்பதிகளின் அருமைப் புதல்வியும், திருமதி நல்லம்மா கணேஷ், திருமதி நல்லையா பாக்கியம், மு. சிரோன்மணி, மு. கிருஷ்ணபிள்ளை, மு. துரையப்பா (கைதடி), மு. நாகரத்தினம், மு. துரைசாமி ஆகியோரின் அருமைச் சகோதரியும், நா. இராமலிங்கம், நா. ஆறுமுகம் நா செல்லத்துரை, நா. தர்மலிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனியும், சிவலிங்கம் செல்லையா. சிவலிங்கம் பராசு ஆகியோரின் அருமை மருமகளும், இராசலட்சுமி, ரஞ்சனாதேவி, பஞ்சலிங்கம், ரதிதேவி, பரமலிங்கம் ஆகியோரின் அருமைத் தாயாரும், நா. சண்முகசுந்தரம்பிள்ளை, நா. சிவபாதசுந்தரம்பிள்ளை ஆகியோரின் மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு சேரிவு மயானத்தில் நடைபெறும். 2012

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி ரோட் மேலைவீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

2வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) மொடேர்ண் (பதுளை) விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன், தேவிகா
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி, நாகையா, ஏ. வி. எம். ராஜன் ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

யாதவா (மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி நடித்த
கல்யாண பரிசு

REGAL—JAFFNA
NOW SHOWING
Gina Lollobrigida & Sean Connery in
WOMAN OF STRAW

மகாத்மா தியேட்டர்
தெல்லிப்பழை, சுரவெட்டி
தினசரி 6-30, 9-30
ஓய்வு தினங்களில் காலை 10 மணி
எம். ஜி. ஆர். - பத்மினி நடித்த
அரசிளங்குமரி

நியூ காலிங்கஜ (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி நடித்த
கற்பகம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
நடித்த
நீயா நானா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org